பக்கங்கள்: ஆறு

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 20 புதன்கிழமை (4-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 249

★ ஆடிவேல் நிகழ்வுகளுக்கு மத்தியில்

# பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் இரு குண்டு வெடிப்புச் சம்பவங்கள்!

## 6 பேர் பலி; 35 பேர் காயம்

கொழும்பு, ஆகஸ்ட் 4

கொழும்பு பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலய வளவில்—ஆடிவேல் நிகழ்வுகளுக்கு மத்தியில் — நேற்று அதிகாலைக்குப் பின்னர் அடுத்தடுத்து இரு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன இதனால் ஆறு பேர் உயிரிழந்தனர்; முப்பத்தைந்து பேர் வரை காயமடைந்தனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு இன மோதல்கள் காரணம் அல்ல என்றும்—

ஆலயச் சுற்றாடலில் கடைகளை ஒதுக்கிக் கொடுப்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடே காரணமாக இருக்கலாம் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாவது குண்டு வெடிப்புச் சம்பவம் நேற்று அதிகாலை 12 மணிக்கும் ஒரு மணிக்கும் இடையில் இடம் பெற்றது.

அடுத்த குண்டு வெடிப்பு நேற்றுக் காலை 6 மணிக்கு நிகழ்ந்தது.

## முதல் குண்டை சிங்களவர் பக்தர்கள் மீது வீசினார்

நேற்று அதிகாலை கோயில் கர்ப்பக்கிரகத்துக்கு சமீபமாக நின்ற பக்தர்கள் மீது சிங்களவர் ஒருவர் கைக் குண்டை வீசிய போது முதலாவது குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

இதனால் குண்டை வீசியவர் உயிரிழந்ததாகவும் மற்றும் 35 பேர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 'பார்சல்' குண்டை சிறுமி எடுத்த போது வெடித்தது!

காலை 6 மணியளவில் பழைய கதிரேசன் கோயில் வாசலுக்கு அருகே பூச்சாடி ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பார்சல் ஒன்றை சிறுமி ஒருத்தி எடுக்க முயன்ற போது அது வெடித்தது.

பார்சலை எடுத்த சிறுமி, இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் மற்றும் இரு பெண்கள் உட்பட ஆறுபேர் இக்குண்டு வெடிப்பில் உயிரிழந்தனர்.

## 3 பொலீஸாரும் காயம்

நேற்று பம்பலப்பிட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களின் போது அப்பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த மூன்று பொலீஸாரும் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்புச் சம்பவங்களில் காயமுற்ற 35 பேரில் 16 பேர் சிகிச்சையின் பின் கொழும்பு ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினர்.

## ஆடிவேல் ஊர்வலம் நேற்று நடந்தது

நேற்று அதிகாலைக்குப் பின்னர் இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்த போதிலும்.

நேற்றுக் காலை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆடிவேல் ரத ஊர்வலம் குழப்பம் ஏதுமின்றி இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஊர்வலத்தில் பங்கு பற்றினர்.

## மன்னாரில் தேடுதல்

கொழும்பு, ஆக. 4

மன்னார் தீவில் கடந்த வெள்ளியன்று படையினர் வீடு வீடாக தேடுதல் நடத்தினர். வியாழனன்று மன்னாரில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்த நட

(2ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு மோதல்களில் 3 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஆக. 4

கடந்த 29 ஆம் திகதி மட்டக்களப்பு பாலமடு பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது. இம் மோதலில் லெப்டினன்ட் வேங்கையன் (தருமராசா சந்திரகுமார் - வந்தாறுமூலை). இரண்டாம் லெப்டினன்ட் கனிதரன் அல்லது நல்லவன் இளையதம்பி நல்லரத்தினம் - செங்கலடி) ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

கடந்த 31 ஆம் திகதி மட்டக்களப்பு கும்புறுமூலைப் பகுதியை சுற்றிவளைத்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில், 2 ஆம் லெப்டினன்ட் கவிவாணன் (கணேசன் ரவிக்குமார் - இரான்) வீரமரணமடைந்தார்.

(உ-ச)

நீர் அருந்துவதையும் கைவிட்டு

## உண்ணாவிரதத்தை தொடர யுத்தக் கைதிகள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஆக. 4

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகள் நீர் அருந்துவதையும் நிறுத்தி சாகும் வரையான தமது உண்ணாவிரதத்தை நேற்று ஏழாவது நாளாகத் தொடர்ந்தனர்.

நேற்றுக் காலை 11 மணியுடன் நீர் அருந்துவதை அவர்கள் நிறுத்தினர்.

ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி, யுத்தக் கைதிகளை விடுவிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என கைதிகளின் பெற்றோர் தெரிவித்தனர்.

யுத்தக் கைதிகளின் கொழும்பில் உள்ள உறவினர்கள், ஸ்ரீலங்கா பாதுகாப்பு உயர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## காமினி இம்மாத மத்தியில் அரசுடன் இணையலாம்

கொழும்பு, ஆக. 4

காமினி திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

### லலித் மனைவி அரசியலை கைவிட்டு அமெரிக்கா பயணம்

நேற்று பிற்பகல் கொழும்பு பிளவர் வீதியில் உள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைச் செயலகத்தில் அக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும், கட்சித் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கும் இடையில் கடந்த இலநாட்களாக நடைபெற்ற

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவின் தலைவராக ரணில்

கொழும்பு, ஆக. 4

அரசமைப்பு மாற்றம் குறித்து நியமிக்கப்படவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இருப்பார்.

10 ஆளும் கட்சி எம். பிக்களையும் 8 எதிர்க்கட்சி எம். பிக்களையும் கொண்டதாக இக்குழு அமைந்திருக்கும் என அறிவிக்கப்பட்டது.

## 40 தொகுதி அமைப்பாளர்கள் சு.கவிலிருந்து வெளியேற்றம்

சுதந்திரக் கட்சியின் சுமார் 40 தொகுதி அமைப்பாளர்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்படவுள்ளனர்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளியேற்றப்பட வேண்டியவர்களின் பட்டியல் தயாராகி விட்டதாகவும்—

கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அங்கீகாரத்துக்காக அப்பட்டியல் கடந்த வாரம் சமர்ப்பிக்கப் பட்டதாகவும்—தெரிவிக்கப் பட்டது.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில்

# 70 சதவீத மாணவர்கள் பற்சூத்தையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ் குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களில் எழுபது சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் பற்சூத்தையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகளிலிருந்து இது தெரியவந்திருப்பதாக வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழு இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலேயே பற்சூத்தை, முரசு வியாதி, வாய் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுகின்றன.

வாய் சுகாதாரத்தை சிறு வயதிலிருந்தே பேணாவிடில் பற்களை இளம் வயதிலேயே இழக்கவேண்டிநேரிடுகிறது. இதனால் மாணவர்களின் உடல் நிலையும், மன நிலையும் பாதிக்கப்படலாம்.

யாழ். குடாநாட்டில் பாடசாலை பல் வைத்திய சிகிச்சை நிலையங்கள் சென்ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி ஆகியவற்றில் இயங்குகின்றன. பாடசாலை மாணவர்கள் இச்சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று தமது பற் சுகாதாரத்தைப் பேணலாம்.

இப்படி அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-162)

நெவில் சமர்ப்பித்த

# 17 ஆவது அரசமைப்புதிருத்த சட்ட மூலம் காலாவதியானது

## சபாநாயகர் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஆக. 4

கட்சித் தாவல் தடைச் சட்டத்தை நீக்கக்கோரும் 17 ஆவது அரசமைப்பு திருத்தச்சட்டமூலம் காலாவதியாகிவிட்டதாக சபாநாயகர் எம். எச். முஹம்மது நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேற்படி சட்ட மூலத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்த சுதந்திரக்கட்சி எம். பீ. டாக்டர் நெவில் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் சமூகமளிக்காததால், அந்த சட்ட மூலம் காலாவதியாவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

இந்த சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் தாம் சமர்ப்பிக்கப்போவதில்லை என்று டாக்டர் நெவில் பெர்னாண்டோ, கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அறிவித்துள்ளார்.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஆராய அரசினால் தெரிவுக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதால் தமது திருத்தச் சட்ட மூலம் அவசியம் அற்றது என டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். [இ-3-6]

உண்ணாவிரதத்தை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுடன் இது சம்பந்தமாகத் தொடர்பு கொண்ட போது —

தற்போது யுத்த சூழ் நிலை நிலவுவதால், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளன எனவும் —

அதனால் கைதிகளின் விடுவிப்பு தொடர்பாக தம்மால் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் —

எனவே கைதிகள் தமது உண்ணாவிரதத்தை கைவிட வேண்டும் என்றும் —

ஸ்ரீலங்கா பாதுகாப்பு உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள் தெரிவித்த இந்தப் பதிலை கொழும்பில் உள்ள கைதிகளின் உறவினர்கள் யுத்தக் கைதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்விடயங்கள் அடங்கிய கடிதங்களை நேற்றுக் காலை யுத்தக் கைதிகள் பற்றுக் கொண்டனர்.

என்றாலும் நீர் அருந்தாது உண்ணாவிரதத்தை தொடரப் போவதாக கைதிகள் நேற்று மாலை தெரிவித்தன.

தம்மை அரசு கவனிக்காது விடும் பட்சத்தில், இறப்பதை தவிர வேறு வழி தங்களுக்கு இல்லை என்றும் அவர்கள் நேற்று மாலை தெரிவித்தனர். (உ-3)

நெருப்புக் காய்ச்சல்:

## குணமாக 3 மாதம் செல்லாது

யாழ்ப்பாணம், ஆக. 4

நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒருவரைக் குணமாக்குவதற்கு மூன்று மாதங்களுக்கு மேல் செல்லும் என்பது தவறு. நான் அப்படிக் கூறவில்லை.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் க. சிவநேசன் தெரிவித்தார்.

வழமையாக நெருப்புக் காய்ச்சலை இரண்டு வாரங்களுக்குள் குணமாக்கிவிடலாம். ஒரு சிலருக்கு அந்நோய் திரும்ப வரும்போது மட்டுமே அது குணமாக மேலும் சில நாட்கள் செல்வதுண்டு—என்று அவர் கூறினார்.

''நெருப்புக் காய்ச்சல் குணமான 3 மாதமும் செல்கிறது'' என்ற நேற்றைய உதயன் 3 ஆம் பக்கச் செய்தியில் கருத்து மாற்றம் ஏற்பட்டதற்கு வருந்துகிறோம். (அ)

மன்னாரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை எடுக்கப்பட்டது

மன்னார் தீவில் பொதுமக்களுடன் கலந்து விடுதலைப் புலிகள் போராளிகள் வசித்து வருகின்றனர் என்று இராணுவ அதிகாரிகள் நம்புவதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ)

## உலக தரிசன பிரதிநிதிகள் யாழ். வருகை

உலக தரிசன நிறுவனத்தைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நிறுவனத்தின் திட்ட மதிப்பீட்டு முகாமையாளர் அன்றூ சுந்தர்கின், தொடர்பு முகாமையாளர் வாரன் பேடின்ஸ் ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இங்கு ஒருவார காலம் தங்கி இருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை இவர்கள் பார்வையிடுவார்கள்.

உலக தரிசன நிறுவனம் 1990 ஜூன் மாதத்துடன் யாழ்ப்பாணத்தில் தனது நிவாரணப் பணிகளை நிறுத்தியது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் முதல் தடவையாக தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (இ-5)

## யாழ். ஆஸ்பத்திரி ஜெனரேற்றரில் கோளாறு

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ். போதனாவைத்தியசாலையின் 85 கே. வி. பிரதான ஜெனரேற்றர் மீண்டும் முழுமையாக இயங்கமுடியாத நிலையை அடைந்துள்ளது.

இந்த ஜெனரேற்றர் சமீபத்திலேயே திருத்தப்பட்டு இயங்க வைக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த ஜெனரேற்றர் மீண்டும் முழுமையாக இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டதை அடுத்து வைத்தியசாலையின் அத்தியாவசிய சேவைகள் சில பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-71-51)

காமினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு, இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் காமினி திஸநாக்காவுக்கு வழங்கப்பட்டது.

இதனை அடுத்து காமினி திஸநாயக்கா பெரும்பாலும் இம்மாத மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளலாம் என்றும் —

அவருக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

இதேவேளை —

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும் நேற்றுப் பிற்பகல் சிறிகோதாவில் நடைபெற இருந்தது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கும் ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவுக்கும் இடையில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற பேச்சு விவரம் இக் கூட்டத்தில் ஆராயப்பட இருந்தது.

இதற்கிடையில் —

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் மனைவியார் திருமதி சிறீமாணி தமது அரசியல் பிரவேசம் செய்வது என்ற முடிவை மாற்றி மகளுடன் அமெரிக்கா பயணமானார்.

தாம் அரசியலில் பங்கேற்க விரும்பவில்லை எனத் தெரிவித்த அவர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் போக்கை கண்டித்து அறிக்கை ஒன்றையும் விடுத்திருந்தார். (இ-6-3)

# மண்கிண்டிமலைக்கு 'ஜனகபுர' என்றபெயர் ஏன்?

கொழும்பு, ஆக. 4

மண்கிண்டிமலைப் பகுதிக்கு ''ஜனகபுர'' என்ற சிங்களப் பெயர் எப்படி வந்தது?

''சண்டே ரைம்ஸ்'' வார இதழின் இராணுவ விவகார செய்தியாளர் இப்பெயர் வந்த விவரத்தை தனது கட்டுரையில் வெளியிட்டிருக்கிறார்.

வெலிஓயா பகுதியில் தொடரான சிங்களக் குடியேற்றங்களை அரசு அமைப்பதற்கு முன்னோடிகளில் ஒருவராக இருந்து உதவியவர் இராணுவ அதிகாரி ஜனக பெரேரா. அவர் அப்போது கேணலாக இருந்தார். இப்போது இவர் பிரிகேடியர் தர அதிகாரியாக இருக்கிறார். சிங்களக்குடியேற்றங்களை அமைக்க உதவியவர் என்ற வகையில் அவரின் ''ஜனபுர'' என்ற பெயர் மண்கிண்டிமலைப் பகுதிக்கு சூட்டப்பட்டது.

# குடியேற்ற சிங்களவருடன் அமைச்சர் வாக்குவாதம்!

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு பின்னர் மண்கிண்டிமலைப் பகுதிக்கு விரைந்து சென்ற அமைச்சர் தயாரத்ன அங்கு பாடசாலை ஒன்றில் தங்கியிருந்த — இடம் பெயர்ந்த — சிங்கள மக்களுடன் சூடான வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதுமான பாதுகாப்பு வழங்கப்படவில்லை; அத்தியாவசிய உணவுத் தேவை தமக்கு வழங்கப்படவில்லை என்று சிங்களவர்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அரசாங்கத்தை அப்போது குற்றஞ்சாட்டினர்.

இதனால் ஆத்திரமடைந்த அமைச்சர் வாயை மூடும்படி அச்சிங்களவர்களை எச்சரித்ததுடன் —

தினமும் ஆறு லட்சம் அகதிகளுக்கு அரசாங்கம் உணவு வழங்கி வருகிறது என்று பதிலளித்தார்.

மண்கிண்டிமலைப் பகுதியில் உள்ள குடிசைகள் எல்லாம் காலியாக கிடக்கின்றன என அங்கு சென்ற ''சண்டே ரைம்ஸ்'' செய்தியாளர்கள் தெரிவித்தனர். (உ-எ)

தாக்குதலின் பின்னர்

# 8 கொமாண்டோக்கள் கால்களை இழந்தனர்!

மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற இராணுவக் கொமாண்டோப் படையினரில் அதிகாரி ஒருவர் உட்பட 8 கொமாண்டோக்கள் விடுதலைப் புலிகள் வைத்து விட்டுச் சென்ற ஜொனி கண்ணி வெடிகளில் சிக்கிக் கால்களை இழந்தனர்.

—''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டுள்ளது

பின்னர் புல்டோஸர்கள் கொண்டு வரப்பட்டு, கண்ணி வெடிகளைப் படையினர் அகற்றினர்.

'மூலை முடுக்குகளில் எல்லாம் விடுதலைப் புலிகள் புதைத்து விட்டுச் சென்ற கண்ணிகளை புல்டோஸரைக் கொண்டு அகற்றிவிட முடியாது

,'நாம் பாவிப்பது 18 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் சாதனம்''—என இராணுவ அதிகாரி ஒருவர் கிண்டலாகக் கூறினார் என்று ''சண்டே ரைம்ஸ்'' செய்தியாளர் தெரிவித்தார்.

# ஹபரணை காட்டில் புலிகள் நடமாட்டமாம்

ஹபரணை காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் காணப்படுவதாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த சனி இரவு காட்டுப் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் விசில் ஊதும் சத்தங்களும் கேட்டன என்று தெரிவிக்கப்படுகிறது

ஹபரணை — ஹொரவ பொத்தானை வீதியில் அமைந்துள்ள அளுத்ஓயா பொலீஸ் காவல் சாவடிக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில் இந்தநடமாட்டம் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சாத்தியமான இலக்குகளை குறிவைப்பதற்காக விடுதலைப்புலிகள் அங்கு நடமாடுகின்றனர் என்று பொலீஸார் நம்புகின்றனராம். [உ-எ]

# யுத்தம் முடிவுக்கு வரும் சாத்தியம் தெரியவில்லை

## ஜனாதிபதி டி.பி. கூறுகிறார்

வடக்கு-கிழக்கு யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும் சாத்தியம் கண்ணுக்குத் தெரியவில்லை. அதனால் விருப்பமின்றியே அரசாங்கம் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புச் செலவினத்துக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கவேண்டியுள்ளது

ஜனாதிபதியும நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா கண்டி ராஹுல கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசியபோது முன் கண்டவாறு தெரிவித்தார்.

அறிவற்ற இந்த யுத்தத்தை விரைவில் முடித்துவிடவேண்டும் என்று ஒவ்வொருவரும் வேண்டுகின்றனர் ஆனால் பிடிவாதக்காரர்களினால் யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவது கண்ணுக்குத் தெரிவதாக இல்லை என்று அங்கு அவர் மேலும் கூறினார். (உ எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... மாநகர ... யாழ்ப்பாணம்

# இடம்பெயர்ந்தவர்களுக்கு ரூ.4,000 நிவாரணம் வழங்குக

## அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 4

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் அவர்களின் உடனடி அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில்—தென்பகுதி மாவட்டங்களில் வழங்கப்படுவது போல்—நாலாயிரம் ரூபா பணக் கொடுப்பனவு வழங்க வேண்டும்.

தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் யாழ். அரச அதிபரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் தற்சமயம் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றி ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் கடந்த 28 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தீவக மக்கள் நலன் காக்கும் கழகப் பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களிலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அங்கு எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ தீவகப் பகுதிகளில் இயங்கி வரும் வைத்திய சாலைகள் யாவும் அந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தற்சமயம் தங்கியுள்ள குடியிருப்புக்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

★ இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களில் இலவச உலர் உணவு முத்திரை நிவாரணம் பெற முடியாத அரச ஊழியர், ஓய்வூதியர், கூட்டுறவுச் சங்கப் பணியாளர் ஆகியோருக்கும் அது வழங்கப்பட வேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் பொதுசன உதவிப் பணம் பெறத் தகுதி பெற்றிருந்தும் பல மாதங்களாக அதனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்போருக்கு அந்தப் பணத்தைப் பெற வழிவகை செய்தல்.

★ இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்த மக்கள் வங்கியிடமிருந்து நிதி கோருதல்.

(த-5 17)

# பதில் அதிபர்கள் நிரந்தர நியமனம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ். மாவட்டத்தில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுவோரை நிரந்தரமாக்கும் வேலைகள் தாமதமாகியுள்ளதாக தெரியவந்தது.

பதில் அதிபர்களாக கடமையாற்றுபவர்களின் விவரங்களை அந்த அந்த கோட்டங்களின் கல்விச் சேவை ஆணைக்குழு செயலாளருக்கு இதுவரை அனுப்பாததாலேயே இந்த தாமத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்தது.

யாழ்ப்பாணம், வேலணை கோட்டத்தில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுவோரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கொழும்பில் கையளித்துள்ளதாகவும்—

அவர்களுக்கு விரைவில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

ஏனைய கோட்டங்களில் கடமையாற்றும் பதில் அதிபர்களின் விவரங்களை தமக்கு விரைவாக கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு பணிப்பாளரை கல்விச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் கேட்டுள்ளார்.

(த-3)

## உணவுப் பொருள் விநியோகம்

அரியாலை, ஆக. 4

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வறுமை நிவாரண உணவு முத்திரையின் 8ஆவது தொடரின் நான்காவது புள்ளிக்கு உணவுப் பொருள்களை விநியோகித்து வருகின்றது.

(த-17)

## கைதிகள் விவகாரம்:

# கூட்டுப்படையிடம் அனுமதி கோருகிறது சர்வமதக் குழு

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள யுத்தக் கைதிகளின் பெற்றோரை கொழும்புக்கு அழைத்து வர யாழ்ப்பாணம் செல்ல கூட்டுப்படைகள் தலைமையகத்திடம் சர்வமதக் குழுவினர் அனுமதி கோரியுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செல்ல சர்வமதக்குழுவினருக்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் யுத்தக் கைதிகள் விடுதலை குறித்து அவர்கள் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார்கள் என தெரிவிக்கப்பட்டது.

[த-3]

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று புதன்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் மாலை 6 மணிக்கு இராதிகா சுப்பிரமணியம் இன்னிசைக் கச்சேரி.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15—6-15 ''சுபத்திரை கல்யாணம்'' எனும் பொருளில் கானசுதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்,

பிற்பகல் 2—3 மணிவரை ''சைவ விரதங்கள்'' எனும் பொருளில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சமயச் சொற்பொழிவு.

மாலை 5-30—6-30 மணிவரை பிரசங்கபூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''சயந்தனின் அவலநிலை'' எனும் பொருளில் கந்தபுராண இசைப்பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி—நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00—4-30 மணிக்கு கந்தபுராணபடனம்.

(க-111-126)

# செய்திக் கொத்து

### சிக்கன அடுப்பு

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிக்கன அடுப்பைப் பயன்படுத்துவதில் உரும்பராய் மக்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர். இந்த மாதத்தில் பல வீடுகளில் இந்த அடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. 250 ரூபா கட்டணம் செலுத்தினால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் இதனை அமைத்துக் கொடுக்கிறது.

(க-154)

### விவசாயக் கடன்

நடுத்தர வருமானமுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்கிறது. இதற்கான விண்ணப்பங்கள் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் கோரப்பட்டுள்ளன. ஒருவருக்கு 2,500ரூபா கடனாக வழங்கப்படும்.

### முதலுதவிச் சேவை

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ தினங்களில் யாழ். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் வழமைபோல் இவ்வருடமும் தொண்டர் சேவையில் ஈடுபட்டு முதலுதவிச் சேவைகளை நடத்தி வருகின்றனர்.

### கணித செயல்முறை

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் கடந்த மாதம் 6ஆம் திகதி மல்லாகம் கொத்தணி அதிபர் திரு. அ. கமலநாதன் தலைமையில் கணித செயலமர்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் யாழ். மாவட்ட கணித உதவிக் கல்விப் பணிப்பாளர், திருமதி அ. வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(க)

### ''முத்துச் சிதறல்'' கையேட்டுப் பிரதி

தீவகக் கோட்ட மாணவர் அமைப்பினால் ''முத்துச் சிதறல்'' என்னும் கையேட்டுப் பிரதி மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. வை. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.

(க)

### சாரணர் சின்னம் சூட்டு விழா

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் சின்னம் சூட்டு விழா கடந்த மாதம் 28ஆம் திகதி மகேஸ்வரி வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் திரு. த. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

## காலி சிமெந்து ஆலையைச் சேர்ந்த

# நான்கு தமிழ் ஊழியர்கள் காங்கேசனுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஆக. 4

காலி றுஹுணு சிமெந்து தொழிற்சாலையில் கடந்த இரு வருடங்களாக வேலை செய்து வந்த 4 தமிழ் ஊழியர்கள் நிருவாகத்தால் திடீரென அங்கிருந்து காங்கேசன் ஆலைக்கு மாற்றப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை காலை 11மணிக்கு இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்டதாகவும்—


ஒரு மணி நேரத்தில் தொழிற்சாலை விடுதியில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்று காலக்கெடு வழங்கப்பட்டதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

இதனால் திகைப்படைந்த அந்த நான்கு ஊழியர்களும் அங்கிருந்து வெளியேறி ஆலயம் ஒன்றில் தஞ்சமடைந்து மறுநாள் கொழும்பு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் நால்வரும் முன்னர் காங்கேசன்துறை ஆலையில் கடமையாற்றி காலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

[த-3]

## யாழ். மாநகர சோலைவரி வழக்கு:



# அதிகரிப்பை இடை நிறுத்தும் உத்தரவு ஆணையாளருக்கு தபாலில்

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ். மாநகர சபையின் சோலைவரி அதிகரிப்புக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவு, யாழ். மாநகர ஆணையாளருக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் சோலைவரி விகிதம் 1998ஆம் ஆண்டு தொடக்கம் 200சதவீதமாக மாநகர ஆணையாளரால் அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் எஸ். நாகராசா கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு நீதியரசர்கள் ஆனந்தக்குமாரசாமி, எதுசூரியா ஆகியோர் முன்னிலையில் கடந்த மாத மத்தியில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர் தரப்பிலான வாதத்தைத் தொடர்ந்து வரி அதிகரிப்பை இடைநிறுத்தி வைக்குமாறு மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்த நீதியரசர்கள் தற்போதைய சூழ்நிலை மற்றும் தபால் சேவை சீர்குலைவு என்பவற்றை கருத்தில் கொண்டு நீதி மன்றத்தின் உத்தரவை வழக்கின் பிரதிவாதிகளுக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப மனுதாரருக்கு அனுமதி வழங்கியிருந்தனர். அதன்படி மனுதாரர் திரு. எஸ் நாகராசா மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவை கொழும்பில் இருந்து கொண்டு வந்து இங்கிருந்து திங்கட்கிழமை பதிவுத் தபாலில் பிரதிவாதிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பிரதிவாதிகள் தமது பதிலைத் தாக்கல் செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை அவகாசம் வழங்கியுள்ளது.

வடபகுதி மக்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். வேலை வாய்ப்பு ஊக்குவிக்கப்படவில்லை. உணவுத் தட்டுப்பாடு நிலவுகிறது. கடந்த 3வருடங்களாக போக்குவரத்து மிகக் குறைந்த அளவே நடக்கிறது. பொருளாதார நடவடிக்கைகள் முற்றாகச் சீர்குலைந்துள்ளன.—

30-5 87இல் காலாவதியான யாழ். மாநகரசபைக்கு தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்தகைய நிலையில், அமைச்சரின் பணிப்பின் பேரிலேயே புதிய அதிகரிக்கப்பட்ட சோலை வரியைக் கொண்டு வர முடியும். ஆனால் அப்படி உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை—

ஆகவே, சோலைவரி அதிகரிப்புத் தொடர்பாக ஆணையாளர் எடுத்த முடிவுக்குத் தடை விதிக்க வேண்டும். ஆணையாளர் தமது முடிவை அமுல் செய்வதற்கும் தடை விதிக்க வேண்டும்— என்று மனுதாரர் தமது மனுவில் கோரியிருந்தார்.

(த-3)

# ஜூலை-ஆக. உலர்உணவு முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஆக 4

ஜூலை மாதத்துக்கான இலவச உலர் உணவு விநியோகம் அதற்கான உலர் உணவு முத்திரைக்கே வழங்கப்பட வேண்டும் என யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது.

ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான உலர் உணவு முத்திரைகள் 'வாஹுவ' கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளதை அடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உலர் உணவு முத்திரைகள் கொழும்பில் இருந்து இங்கு வந்து சேராததால்— ஜூலை மாதத்துக்குரிய உலர் உணவு விநியோகத்தை— ஜூன் மாதத்துக்கு வழங்கப்பட்டதுபோல பழைய உலர் உணவு முத்திரையில் வழங்குமாறு யாழ். அரச அதிபர் ப. நோ. கூ. சங்கங்களைப் பணித்திருந்தார்— ஆனால் புதிய முத்திரைகள் இப்போது இங்கு வந்து சேர்ந்துவிட்டதால் அவற்றின் மூலமே உணவு விநியோகத்தை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சகல பிரதேச செயலர்களும் தமக்குரிய உலர் உணவு முத்திரைகளை இன்று புதன்கிழமைக்கு முன்பாகப் பெற்று உரியவர்களுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி கணக்காளர் திரு. த. அரியரத்தினம் கேட்டுள்ளார்.

மேற்படி ஜூலை மாதத்துக்கான இலவச உலர் உணவு விநியோகத்துக்குரிய ''வழங்கல் கட்டளைகளை'' இதுவரை எந்தவொரு ப. நோ. கூ. சங்கமும் பெற்றுக் கொள்ளாததால்— வழமைபோல பொருள்களை உணவு முத்திரைக்கு வழங்குவதில் கால தாமதமோ வேறு தடங்கல்களோ ஏற்பட காரணமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய ஆங்கில தட்டச்சு இயந்திரம் Olympia, Olivetti - Portable விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. சுஜீவன், இல. 8/1, அம்மன் வீதி, சுந்தர்மடம், யாழ்ப்பாணம். (26799)

லுமாலா முக்கால் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: இல. 165, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (26806)

புதிய T.V.S. Champ மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விஜயரத்னம், விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி. (26811)

## தேவை

½ அங்குலம் இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-5535)

## ஆண்டு - 5 புலமைப்பரிசில்

கணிதம், தமிழ், மாதிரி வினாத்தாள்கள் - 35 கொண்ட அரிய பயிற்சி நூல் (அச்சேற்றப்பட்டது) விற்பனையாகின்றது; இந் நூல் ஒன்றேதிறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளிப்பது. வெளியீடு: கு. வி. அச்சகம் புத்தக விற்பனை நிலையம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6394)

## தவறிவிட்டது

2-8-93 அன்று பகல் 12 மணியளவில் யாழ். நகரில் இருந்து மணல்தறை வீதி வழியாக நல்லூர் செல்கையில் கருநீல பிறேம் மூக்குக் கண்ணாடி மஞ்சள் நிறக் கவருடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து த. ஞானலிங்கம், இல. 6, சங்கிலியன் வீதி, நல்லூர் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (26797)

## ஆண்டு - 3 வகுப்பு

ஆண்டு 3இற்கு சகல பாடங்களும் யாழ் முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளன. புலமைப்பரிசில் (1995)ற்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 7-8-93 சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணி. இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26809)

## ஆனந்தம்

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய்ப்பவுடர் பேன், சொடுகு, அழுக்கு அகற்றி, குளிர்ச்சியானது. சுகாதாரத்திற்கு சிறந்தது. ஐந்து நிமிடம் வெந்நீரில் ஊறவிட்டு பாவிக்கவும். கிடைக்குமிடம்: ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம் - சாவகச்சேரி, திருவருள் களஞ்சியம் - கொடிகாமம், திரு. மு. சச்சிதானந்தம் வியாபாரிமூலை, பருத்தித்துறை. ஸ்ரீ கணேஸ் ஸ்ரோர்ஸ், லீலாவதி ஸ்ரோர்ஸ் கைதடி. (சி-5639)

## ஆண்டு - 4 பரீட்சை

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் (1994) மாதிரிப்பரீட்சை 07-08-93 சனிக்கிழமை முற்பகல் 8.00, 11-00 மணி நேரங்களில் நடைபெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26808)

## "நீமியா"

நீமியா உரம் வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாக கொண்டது. மண்வளம் பெருக்கி பயிரைத் தாக்கும் பூச்சிகளை விரட்டி விளைச்சலைப் பெருக்குகிறது. கிலோ ரூபா 18/-. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. "மில்க்வைற்". (சி-5553)

## டிப்ளோமா பயிற்சி நெறி

வவுனியா விவசாயக் கல்லூரியில் தமிழ்மொழி மூலம் நடத்தப்படும் விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி (1993—95)க்கு அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்கள் வவுனியாவில் உள்ள விவசாயக் கல்லூரி அதிபருக்கு இம்மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்றும் — இது தொடர்பான அறிவித்தல் வெளியாகிய ஜூலை மாதம் 2ஆம் திகதிய வர்த்தமானியை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் தன்னுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

# அறிவித்தல்

## கலைக்கூடம் - யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ள கலைக்கூடத்தில் காட்சிக்கு வைப்பதற்கென எமது ஓவியங்கள், சிற்பங்கள், உலோகம், மரம் முதலானவற்றினாலான கலை கைப்பணிப் பொருள்கள், கலை சம்பந்தப்பட்ட நூல்கள் முதலானவைகளைத் தந்துதவும் வண்ணம் கலைஞர்களையும் கலையார்வம் மிக்க பொது மக்களையும் கேட்டுக் கொள்கின்றோம். இக்கலைக்கூடத்தில் காட்சிக்கு வைப்பதற்கு இவைகளை விற்க விரும்புவோரையும், அன்பளிப்புச் செய்ய விரும்புவோரையும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் காட்சிக்கு வைப்பதற்கு விரும்புவோரையும், 1993-8-20 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

க. டிவகலாலா,
செயலாளர்,
கலைக்கூடம் அமைப்புக் குழு.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1993-8-2. (சி-5552)

# இலங்கையின் இந்துக் கோயில்கள் பற்றிய வரலாறு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கையிலுள்ள பிரதான இந்துக் கோயில்களின் வரலாறுகளைத் தயாரித்து நூலுருவில் மூன்று தொகுதிகளாக வெளியிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சிவன், முருகன், கிருஷ்ணர், பிள்ளையார், அம்மன், ஐயனார் முதலான 45 வரையான கோயில்கள் ஆய்வுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

இக்கோயில்கள் பற்றி எழுத விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கோயில்கள் வரலாறு பற்றிய கட்டுரைகள், பௌராணிக மரபுகள், அரச ஆவணங்கள், இலக்கியக் குறிப்புக்கள், தொல்பொருட் சின்னங்கள், நடைமுறை வழமைகள், ஏடுகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு நோக்கில் எழுதப்பட வேண்டும்.

தல வரலாறு, ஐதிகங்கள், நித்திய, நைமித்திய கருமங்கள், விழாக்கள், வழிபாட்டு முறை, கட்டட, சிற்ப, ஓவிய அமைப்புக்கள் போன்றவை விளக்கப்படுதல் வேண்டும்.

திணைக்களம் நியமிக்கும் அறிஞர் குழுவினால் விண்ணப்பதாரரின் தகைமைகள் பரிசீலிக்கப்படும். அத்துடன் அறிஞர் குழுவின் வழிகாட்டலுக்கமைய கட்டுரைகள் எழுதப்படவும் வேண்டும்.

சுயமுகவரி எழுதப்பட்ட தபாலுறையினை அனுப்பி மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்க.

பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் - திணைக்களம்,
9ஆம் மாடி, 'காப்புறுதி இல்லம்'
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 2. (சி-5562)

# யாழ். ப.நோ.கூ. சங்கத்துக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 4 யாழ். ப. நோ. கூ. சங்கத்துக்கு 'வாதுவ' கப்பலில் நூறு 'றொபின்' நீர் இறைக்கும் இயந்திரங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள சங்க உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட இருப்பதாக யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சூ. சிறில் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் - 1994

G. A. Q.; 1st in Com.

பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hons)

பிரிவு I சனி, ஞாயிறு 5:00 — 6:00 p. m.
பிரிவு II செவ். வியாழன் 6-30 — 7-30 a. m.

ஆரம்பம்: 07 - 08 - 1993
சனி 5:00 p. m.

பேராதனைப் பல்கலைக்கழக B. A. பொருளியல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.


BECON
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/5640)

சில்லாலை
# புனித கதிரைமாதா ஆலய திருவிழா

மேற்படி ஆலயத் திருவிழா இவ்வருடம் ஆவணி மாதம் 6ஆம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12, 13, 14ஆம் திகதிகளில் பிற்பகல் 4-00 மணிக்கு திரிதின திருப்பலி ஆராதனை நடைபெற்று, 15ஆம் திகதி காலை 7-00 மணிக்கு திருவிழா திருப்பலி நிறைவேற்றப்படும்.

பங்கு சபை;
[26813] புனித கதிரைமாதா ஆலயம்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 — 05 — 1933 | 04 — 08 — 1989 |

அமரர்
## தம்பிராஜா நடராஜா
(பிரதம லிகிதர் லோகி எஸ்டேட், தலவாக்கலை)

காலங்கள் வந்து பல கோலங்கள் செய்திடினும் உங்கள் உருவம் எங்கள் கண்முன் தோன்றும்; ஆண்டுகள் தான் நான்கு சென்றாலும் - அப்பா உங்கள் அன்பான பாசம், ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

"பவானி இல்லம்",
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (26803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

## உதயன்

## வங்கி அதிகாரிகள் கவனத்துக்கு!

தமிழர்களின் பணம், சிங்களப் பகுதிகளின் அபிவிருத்திக்கும், தமிழர்களுக்கு எதிரான போருக்கும் பயன்படும் நிலை மாற வேண்டும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மக்கள் வங்கிக் கிளை ஒன்றை திறந்து வைத்தபோது துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் தமிழர்களின் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்களின் நிதி வளமும், பண நிலையும் பெரிதும் குன்றிவிட்டன.

யுத்தம் தொடங்கிய கடந்த மூன்று வருடங்களில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் நலிந்துவிட்டது. விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய உற்பத்தித் துறைகள் அனேகமாக முற்றாக வீழ்ச்சி கண்டுவிட்டன. அதே போல வர்த்தக வியாபாரத் துறைகளும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இராணுவத் தாக்குதல், இடம் பெயர்வு என்பனவற்றால் நாளாந்த வாழ்க்கைக்கான வருமானத்தைத் தேடும் சாதாரண தொழில்துறையும் தேய்ந்துவிட்டது.

இத்தகைய ஓர் இருள் கவிந்த, நலிந்துபோன பொருளியல் பின்புலம் காரணமாக தமிழர்களின் நிதிவளம் மிகமிகக் குன்றிப்போயுள்ளது.

என்ன கஷ்டமிருப்பினும் கிடைப்பதில் சிறிய அளவினையேனும் சேமிக்கும் வழக்கம் தமிழர்களின் சந்ததிப் பழக்கம். வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி சிறிய சேமிப்பைச் செய்வதில் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள். அதனால் அவர்கள் இந்த இருண்ட சூழ்நிலையிலும் வங்கிகளில் தம்மாலியன்ற சேமிப்புகளை, நிலையான கணக்குகளை வைக்கிறார்கள்.

ஆனால் அந்த முதலீடுகள் உரிய முறையில் தமிழ்ப்பகுதி மக்களுக்கு உதவுகின்றன; பயன்படுகின்றன என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் இப்போது தமிழ்ப் பகுதிகளில் உள்ள வங்கிக் கிளைகள் தமது கடன் வழங்கும் திட்டங்களை நிறுத்திவிட்டன; அல்லது கட்டுப்படுத்திவிட்டன.

இதன் காரணமாக தமிழர்களின் பணம் அரசாங்கத்தினால் தென்னிலங்கை அபிவிருத்திக்கே பயன்படுத்தப்படுகின்றது. ஏன் தமிழருக்கு எதிரான போருக்கும் தமிழர் பணம் உபயோகிக்கப்படுகிறது!

தமிழர் பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளை பாதுகாப்பைக் காரணம் காட்டி அரசு நிறுத்திவிட்டது: அது மட்டுமா? வெளிநாடுகள், சர்வதேச நிதிநிறுவனங்கள் தமிழர் பிரதேசங்களுக்கென குறித்துரைத்து ஒதுக்கும் நிதி உதவிகளையும், ஏனைய உதவிகளையும் தெற்கிற்கு திசைமாற்றுகின்றது. ''பாதுகாப்புக் காரணம் கருதி'' என்ற முத்திரையைக் குத்தி, அவற்றை தமதாக்கிக் கொள்கின்றது!

கொழும்பு அரசின் பாதுகாப்புச் செலவு என்பது தமிழருக்கு எதிரான போரன்றி வேறென்ன? தமிழர்கள் வங்கிகளில் வைப்புச் செய்யும் பணமும் அவற்றின் தேறிய வருமானமும் தேசிய வருமானம் என்ற பெயரில் தமிழருக்கு எதிரான போருக்குப் பயன்படுகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது.

இந்த நிலையைத் தடுப்பதற்கு, தமிழர் பிரதேசங்களில் உள்ள வங்கிக்கிளைகளில் வைப்புச் செய்யப்படும் பணத்தை, உள்ளூர் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்துக்கும் பயன்படும் திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துவது அவசியம். வங்கிகள் அந்தந்தப் பகுதி மக்களின் பணத்தை அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான ஆதாரமாகப் பயன்படுத்த வேண்டும் இங்குள்ள வங்கி அதிகாரிகள் இது விடயத்தில் இனப்பற்றுடனும், உறுதியுடனும், துணிச்சலுடனும் பணிபுரிய முன்வரவேண்டும்.

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பு; ஜெயலலிதா கண்டனம்

சென்னை, ஆக. 4

தமிழகம் உட்பட நாட்டின் பல பல பகுதிகளில் நடத்தப்படவிருந்த இடைத் தேர்தல்களை மத்திய அரசு ஒத்திவைத்துள்ள செயலை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வன்மையாகக் கண்டித்துள்ளார்.

''என்றோ ஒருநாள் இந்த இடைத்தேர்தல்கள் நடத்தப்படும். அப்போது காங்கிரஸுக்கு பாடம் படிப்பிக்கப்படும்''— என்று அவர் சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு காங்கிரஸ் அல்லாத கட்சிகளை கிள்ளுக்கீரையாக நடத்துவதையே இடைத் தேர்தல் ஒத்திவைப்பு எடுத்துக்காட்டுகிறது. என்றும் அவர் தெரிவித்தார்.

தோல்வியைத் தழுவுவோம் என்ற அச்சத்தினால்தான் காங்கிரஸ் இடைத் தேர்தல்களை ஒத்தி வைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதியில் இடம் பெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்குபற்றச் சென்றிருந்த போது இடைத் தேர்தல்கள் மீண்டும் ஒத்திவைக்கப்பட்ட செய்தி முதல் மைச்சருக்குக் கிடைத்தது.

உடனே சென்னைக்குத் திரும்பிய ஜெயலலிதா முன் கண்ட அறிக்கையை வெளியிட்டார்.

தமிழ் நாட்டில் இம்மாதம் 19ஆம் திகதி நடைபெறவிருந்த பழனி நாடாளுமன்றத் தொகுதி, ராணிப்பேட்டைசட்ட சபைத்தொகுதி ஆகியவற்றின் இடைத் தேர்தல்களை அங்கு நிலவும்வரட்சி காரணமாக ஒத்திவைக்க வேண்டும் என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி மத்திய அரசைக் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டில் எந்த மாவட்டமும் வரட்சியினால் பாதிக்கப்படவில்லை என்றும் முதலமைச்சர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

(த-எ)

## எக்ஸ்றே இயந்திரம் வந்தது

யாழ்ப்பாணம், ஆக 4

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கென சிறிய எக்ஸ்றே படப்பிடிப்பு இயந்திரம் ஒன்றை சுகாதார மகளிர் விவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

திருகோணமலைக்கு சென்ற 'குமண' கப்பலில் இந்த எக்ஸ்றே படப்பிடிப்பு இயந்திரம் எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த எக்ஸ்றே படப்பிடிப்பு இயந்திரம் இடத்துக்கு இடம் தள்ளிக்கொண்டு செல்லக் கூடிய வசதி கொண்டது.

[த-17-15]

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ நாவாந்துறை சென். மேரீஸ் எதிர் திவகம் தம்பாட்டி காந்திஜி.

★ குருநகர் பாடும் மீன் எதிர் யாழ் பல்கலைக்கழகம்.

o o o

காந்தி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்க மாப்பாணர் மைதானத்தில்— 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில்— விலகல் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ ஞானமுருகன் வி. க. ''ஏ'' எதிர் நீர்வேலி வளர்மதி வி. க.

★ யாழ். சென். றோக்ஸ் வி. க. எதிர் அளவெட்டி அருணோதயா.

o o o

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தி வரும் — 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை கொழும்புத்துறை இந்து ம. வி. மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3. 00 மணி:- கிறீன் கிங் அணி எதிர் யாழ். ப நோ. கூ. ச. அணி.

★ 4. 30 மணி:- சென். லூட்ஸ் அணி எதிர் கொய்யாத்தோட்டம் வி. க. அணி.

★ 5. 30 மணி:- பாரதி ச. ச. நிலைய அணி எதிர் மணியந்தோட்டம் வி. க. அணி.

(உ-17)

### மீண்டும் கட்சியில் சேர்க்கக்கோரி

## சாகும்வரை உண்ணாவிரதம் அனுரா அணிமேற்கொள்ளும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவை மீண்டும் கட்சியில் சேர்க்குமாறு கோரி சாகும்வரையான உண்ணாவிரதம் மேற்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அனுரா அணியினர் தெரிவித்தனர்.

ஸ்ரீமாவின் வாசஸ்தலமான ரோஸ்மிட்பிளேஸ் இல்லத்துக்கு முன்பாக இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும் என்றும்—

முதல்கட்டமாக கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 25 பேர் பங்குபற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் பெண்களே அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-3)

### தபாலகங்கள் ஊடான

## பொதுசன உதவிப் பணம் இம்மாதம் முதல் நிறுத்தம்

### பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அறிவிப்பு

தபாற் கந்தோர்கள் மூலமாக வழங்கப்பட்டு வரும் பொதுசன மாதாந்த உதவிப் பணத்தை இம்மாதத்துடன் நிறுத்திக் கொள்ளப் போவதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் யாழ். செயலக சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

சென்ற ஜனவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையிலான இக் கொடுப்பனவிற்கான பணம் சமூக சேவைத் திணைக்களத்தினரால் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்திற்கு இதுவரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமூக சீர்திருத்தத்துக்கு எழுத்தாளர் உதவவேண்டும்

### பாராட்டு விழாவில் வரதர்

யாழ்ப்பாணம், ஆக 4

• ''எழுத்தாளர்கள் சமூக சீர்திருத்தத்துக்கு நிறையப்பணிகள் ஆற்ற வேண்டும். அனுபவம் பெற்ற எழுத்தாளர்கள் இளம் எழுத்தாளர்களையும் ஊக்குவித்து சமூக மறுமலர்ச்சிக்கு உதவ வேண்டும்''.

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் அண்மையில் தமக்கு அளித்த பாராட்டு விழாவில் பதிலுரை நிகழ்த்தியபோது மூத்த எழுத்தாளர் திரு. வரதர் இவ்வாறு கூறினார்.

விழா திரு சொக்கன் தலைமையில் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெற்றது. அவர் தமது தலைமையுரையில்;

''ஒரு எழுத்தாளனின் படைப்பை மட்டுமல்ல அவனையும் அவனது சமூகத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். வரதர் பேச்சைக் குறைந்து எழுத்தில் வீச்சைக் கூட்டிச் சாதனை படைத்தவர். அவரது சாதனைகளுக்குப் பின்னர் அவரது தனித்துவத்தைக் காணலாம்'' என்று குறிப்பிட்டார்.

திருமதி கோகிலா மகேந்திரன் பேசும்போது;

''சிக்கல் நிறைந்த மனிதர்களிடையே துணிச்சலாக தமது கருத்தைக் கூறும் வரதர் எழுத்தாளர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குபவர்'' என்று கூறினார்.

திரு. அநுவை நாகராஜன் பேசும்போது; சிறுவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பல சிறுகதைகளை வெளியிட்டவர் வரதர் என்று கூறினார்.

திருவாளர்கள் ஏ. ரி. பொன்னுத்துரை, கொலின்ஸ் ரன்டைன், டொமினிக் ஜீவா, ஐயா சச்சிதானந்தன் உட்படப் பலர் பேசினார்கள்.

(க-111)

உ



## வினை சொல்லவா!

தடையுண்டு பசியுண்டு தவிப்புண்டு களைப்புண்டு
சலிப்புண்டு எனச் சொல்லவா
உடையின்றி உணவின்றி உயிர்ப்பின்றி மலர்ப்பின்றி,
உழல்கின்ற நிலை சொல்லவா
படை கொண்டு பகைநின்று பலிகொண்டு பதைக்கின்ற
படிநின்ற பயனென்னவா
விடைகொண்டு வா எங்கள் வினை கொல்லவா நல்லூர்
வெளிவந்து வா! கந்தவா!

- முருகனடியான்

## இருக்கின்ற வளவளத்தை இனி அழிப்போமானால் இங்கு இனி எமக்கு இருப்பிடமேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பதஞ்சலி மகேந்திரா

உசனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கன டாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. பதஞ்சலி மகேந்திரா அவர்கள் 02-08-93 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மு. சி. பதஞ்சலி (இளைப்பாறிய அதிபர்), மனோன்மணி ஆகியோரின் அன்பு மகனும், சூரியகலாவின் (கனடா) அன்புக் கணவரும், பிருந்தாவின் (கனடா) அன்புத் தந்தையும் கு. திருநாவுக்கரசு (இளைப்பாறிய ஆசிரியர், உரும்பராய்), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், திரு. மகாலிங்கம், மகாராணி (கனடா), மகாதேவி (ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை), மகாலக்குமி, மகாரஞ்சிதம் (ஆசிரியை, அல்லாரை அ. த. க. பாடசாலை, மீசாலை), மகாபாக்கியம் (ஆசிரியை, கொழும்பு), மகாஈஸ்வரி (K. G. இன்டஸ்றீஸ், கொழும்பு), மகாருக்மணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி ம. புஸ்பா, மு. துரைச்சாமி (கனடா), S. T. குணநாயகம் (சவூதி அரேபியா), P. சற்குணநாதன் (ஆசிரியர், கெற்பேலி அ. த. க. பாடசாலை), சி. கணேசன் (மகிஷல் கவுஸ், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற V. பாலசிங்கம் (செமிக்கோ இன்டஸ்றீஸ், கொழும்பு), K. யோகேந்திரா (சென் பீற்றேர்ஸ் கல்லூரி, கொழும்பு), க. இரவீந்திரன் (கனடா), S. சந்திரகுமார் (கனடா), சித்திரா (கனடா), தி. குகன் (U. K.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 03-08-1993 அன்று கொழும்பில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்;
சி. கணேசன்.

மில் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(26805)

## சின்னையா காசிலிங்கம்

சின்னையா காசிலிங்கம் (Retired Works Manager P. M. P. Malasiya) மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் சின்னையா, அனலைதீவைச் சேர்ந்த நாகம்மா சின்னையா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற Dr. சபாபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பத்தின் அன்புக் கணவரும், ரூபன், இந்திரன், சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவலிங்கம் (ஆசிரியர், சிங்கப்பூர்), பரமேஸ்வரி, ஆனந்தலிங்கம் (முகாமையாளர் மக்கள் வங்கி பிரதான வீதி யாழ்ப்பாணம்), கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா - முன்னாள் ஆசிரியர் வயாவிளான்), பஞ்சலிங்கம் (கணக்காளர் அவுஸ்திரேலியா), இந்திராதேவி (அவுஸ்திரேலியா), Dr. கிருஷ்ணலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசலெட்சுமி (சிங்கப்பூர்), பாலசிங்கம் (ஓய்வுபெற்ற கட்டட திணைக்கள பரிசோதகர்) சறோஜினிதேவி, தர்மலீலா (அவுஸ்திரேலியா), தேவகி (அவுஸ்ரேலியா), Dr. பாலகிருஷ்ணன் (அவுஸ்திரேலியா), Dr. ரதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 4-8-93 இல் மலேசியாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. ஆனந்தலிங்கம்
திரு. திருமதி பாலசிங்கம்

71/6 ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

(26815)

## பிரான்சீஸ் செல்வநாதன்

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமான பிரான்சீஸ் செல்வநாதன் 1-8-93 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் அளவெட்டி தெற்கு, மேலயப்புலம் பிரான்சீஸ் லீலாவதி தம்பதிகளின் புதல்வனும், சறோஜா தேவியின் அன்புக் கணவரும், சஜீவன், ஸாயிசோபிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதன், ஜீவநாதன், ஜெனாதர்சினி, பிறேமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, நாகேஸ்வரி, ஆகியோரின் மருமகனும், யோகேஸ், விஜயன், ரஞ்சா, பைனிற்றா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 03-08-1993 செவ்வாய் கிழமை காலை 9 மணிக்கு கொழும்பில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பி. ஜீவநாதன்
(தம்பி)

மேலயப்புலம்,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி,

(26816)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 4-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பொதுசன ..

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படாமையே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் தபால் திணைக்களத்தின் பணத்திலிருந்து ஜூலை மாதம் வரை இவர்களுக்கான கொடுப்பனவு தபாலகங்கள் மூலமாக மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட்டு வந்ததாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழகம்

## இசைமாணி/ நாட்டியமாணி - இசைமணி/ நாட்டியமணி (டிப்புளோமா)

### கற்கை நெறிகளுக்கான 1992/1993 அனுமதிகள்

மேற்படி அனுமதிக்கான செய்முறை, நேர்முகப் பரீட்சைகள் 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இவற்றுக்கான நேர அட்டவணை, அனுமதி அட்டை என்பன தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர அட்டவணை, அனுமதி அட்டை என்பன கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் / தேர்வுகளும் அனுமதிகளும் உடன் தொடர்பு கொள்ளலாம்.

— பதிவாளர்.

(கி-5645)

SCIENCE COLLEGE

பெருமாள் கோவில் லேன்,
யாழ்ப்பாணம்.

Pure-App
Mr. குணசிங்கம்
B. Sc (Hons)

95A/L
ஆரம்பம்:- 05-08-93
வியாழன் 4,15 p.m.

94A/L
புதிய பகுதி
ஆரம்பம்:- 07-08-93

நேர அட்டவணை:-
Sat/Sun 10 A. m.

(கி/5557)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கொக்குவில் இளைஞர் சங்கம் - மனோன்மணி சனசமூக நிலையத்தினால் 01-08-93 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்ற எண்களின் விவரம்:-

| 1 ஆம் பரிசு:- | 2 ஆம் பரிசு:- | 3 ஆம் பரிசு:- |
| --- | --- | --- |
| 1174 | 0179 | 0138 |

ஆறுதற் பரிசுகள்:-

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| 1478 | 1326 | 0683 | 1540 | 0568 |
| 1021 | 0835 | 0387 | 1139 | 0471 |

(26814)

- நிர்வாகம்.

## தென் இந்தியத் திருச்சபை யாழ். பேராயம் முதியோர் இல்லம்

இணுவில் மக்லியோட் வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள முதியோர் இல்லத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். 30-08-1993 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் படிவத்திற்கும் மேலதிக விவரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்,
மக் லியோட் வைத்தியசாலை,
இணுவில், சுன்னாகம்.

(கி-5644)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி டெய்சி பவளம் சுகிர்தரட்ணம்

திருமதி டெய்சி பவளம் சுகிர்தரட்ணம் அவர்கள் 03-08-1993 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்ற வின்ஸ்லோ சுகிர்தரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ரஞ்சனி, ஸ்பென்சர், பாலா, பிறின்ஸ், திருமதி ரூபி செல்வம், திருமதி சுகந்தினி வசந்தகுமார், விக்ரர், றஞ்சிற், மித்திரன், நிமால் ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோ ரூபினி, நேசம், செல்வம், வசந்தகுமாரி, ஷெரினா, ஷாமினி, றேவா, பிறிம்றோஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மன், டிலோ, நிலோ, காலஞ்சென்ற றுபேஷ், நிம்மி, ஷாமலீன், குளோறி, கிறிஸ்ரி, ரஜீவ், டிலக்ஷன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 05-08-1993 வியாழன் மாலை 3-30 மணிக்கு இவரது இல்லத்தில் நடைபெற்று மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
றஞ்சினி ஸ்பென்சர்
(மகள்)

றட்ணா கிறீன்
உடுவில்.

(6399)

## மயில்வாகனம் தேவராஜா
(முன்னாள் பொறியியலாளர் R.V.D.B)

அரியாலையை பிறப்பிடமாகக் கொண்ட ம. தேவராஜா 27-07-1993 அன்று நைஜீரியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனம் - ரோகினியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாவின் அன்புக் கணவரும், துஷாகினி, லதாகினி, சாந்தன், மகிபன், சஞ்ஜீபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கமலாதேவி (A.M.O), கணேசராஜா, வாமதேவா, இரத்தினேஸ்வரன், மேகலாதேவி, ஸ்ரீதேவா, கலாதேவி, மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், த. சபாரத்தினம் (கொழும்பு லேக் ஹவுஸ்), த. தர்மராஜா (இந்தியா) த. சபாரத்தினம் (புத்தளம் சிமெந்து), பேரின்பக்கலைவாணி, ஜீவா, குரைத்தினம், வசந்தகுமாரி, திருபுரச்சந்திரன் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 80, Canterbury, Road, North Harrow, Middx Ha 14 Ph, U.K. இல் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி ரோகிணியம்மா மயில்வாகனம்
(தாயார்)

435, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(26819)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org